DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No.343/2025

Deposition of Witness : LW1/PW1

| | | | |
|---|---|---|---|
| Name | சங்கர் | Taluk | |
| Father's Name | மாயவன் | Village | |
| Age | | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **09.07.2025.** | | | |

( Accused present )

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr-II 1724 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

நான் தற்போது திருவாமூரில் வசித்து வருகிறேன். நான் தற்போது கார் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். பட்டியல் சாட்சிகள் சரண்ராஜ், செல்வம் ஆகியோர்களை தெரியும். அவர்களும் என்னுடன் ஓட்டுனராக வேலை செய்து வருகிறார்கள். ஆஜர் எதிரியை தெரியும். நானும், மேற்சொன்ன பட்டியல் சாட்சிகளும், ஆஜர் எதிரியும் கடலூர் சாலையில் அமைந்துள்ள பாலாஜி திருமண மண்டபத்திற்கு எதிரில் உள்ள அன்னை தெரசா கார் ஸ்டாண்டில் நாங்கள் கார் ஓட்டுனராக ஒன்றாக வேலை செய்து வருகிறோம். கடந்த 03.06.2024 அன்று காலை வழக்கம் போல் நான் மேற்சொன்ன கார் ஸ்டாண்டில் நான் எனது காரினை நிறுத்தி காரின் பின்பக்கம் வழியாக நான் தலையை உள்ளே வைத்து துடைத்துக் கொண்டிருந்தேன். அப்போது மணி சுமார் காலை 06.20 இருக்கும். பின்னாடி நின்ற எதிரி ஸ்ரீதர் என்னை தேவடியா பையா என்று அசிங்கமாக திட்டினார். நான் இந்த சம்பவம் நடக்கும் போது மேற்சொன்ன கார் ஸ்டாண்டின் தலைவராக இருந்தேன். நான் ஸ்ரீதரை பார்த்து ஏன் என்னை அசிங்கமாக திட்டுகிறாய் என்று கேட்டதற்கு நீ எல்லாம் வெளியூர் பையன், இங்க வந்து தலைவர் ஆயிட்டு இது பண்றியா என்று சொல்லி, கீழே கிடந்த மூங்கில் கழியை எடுத்து எனது முதுகில் அடித்தார். மேலும் அவரது கையால் எனது மூக்கில் அடித்தார். மூக்கின் தண்டுவடத்தில் இருந்து எனக்கு இரத்தம் வந்தது. எனக்கு மயக்கம் வருவதுபோல் இருந்தது, நான் உடனே எனது காரை நானே ஓட்டிச்சென்று பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டேன். மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, பண்ருட்டி காவல் நிலையம் சென்று மேற்சொன்ன சம்பவம் சம்மந்தமாக, எதிரி ஸ்ரீதர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் மனு அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் அது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை இவ்வழக்கு சம்மந்தமாக

மறுநாள் மேற்சொன்ன கார் ஸ்டாண்டிற்கு வந்து விசாரித்தார்கள். மேற்சொன்ன சாட்சிகள் சரண்ராஜ் மற்றும் செல்வம் மேற்சொன்ன சம்பவத்தின்போது, மேற்சொன்ன இடத்தில் இருந்தார்கள். ஏற்கனவே நான் மேற்சொன்ன கார் ஸ்டாண்டின் தலைவராக இருந்தபோது நான் வெளியூரில் இருந்து வந்து, மேற்சொன்ன கார் ஸ்டாண்டின் தலைவர் ஆனதால் , உள்ளூரிலேயே வசிக்கும் எதிரி ஸ்ரீதர் கார் ஸ்டாண்டின் தலைவர் ஆகாததால், முன்விரோதம் இருந்து வந்தது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

தற்போது எனது முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை தான், எனது புகாரிலும், போலிசார் என்னை விசாரிக்கையுலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் -2 சரண்ராஜ், 3- செல்வம், 4- பிரகாஷ், 5- முரளி ஆகியோர் எனது நண்பர்கள் என்றால் சரிதான். எனக்கும், ஆஜர் எதிரி ஸ்ரீதருக்கும், கார் சங்க தேர்தல் தொடர்பாக முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். நான் தான் கார் சங்க தலைவர் என்பதனால் நான் சொல்வதை தான் இதர உறுப்பினர்கள் கேட்க வேண்டும் என்றால் சரியல்ல, எதையெதை கேட்க வேண்டுமோ அதை தான் கேட்பார்கள். நான் 8-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.-1 புகார் மனுவினை நான் தான் எழுதினேன். அதில் உள்ள கையெழுத்து திருத்தப்பட்டுள்ளது என்றால் அன்று புகார் கொடுக்கும் பதட்டத்தில் அவ்வாறு கையெழுத்து இட்டுவிட்டேன், அது என்னுடைய கையெழுத்து தான். அதில் தேதி, மாதம் மற்றும் வருடம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி அ.சா.ஆ.-1ல் தேதி, மாதம் மற்றும் வருடம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றாலும், அதில் உள்ள கையெழுத்து திருத்தப்பட்டுள்ளது என்றாலும், எனவே மேற்படி புகாரினை நான் கொடுக்கவே இல்லை என்றாலும் சரியல்ல. நான் பொதுவாக கார் ஸ்டாண்டிற்கு எத்தனை மணிக்கு வருவேன் என்றால், காலை 6.00, 6.30 க்கு எல்லாம் வந்து விடுவேன். இந்த விவரத்தை போலிசார் என்னை விசாரிக்கையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஸ்டேட் HIGHWAY ROAD என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து 10 மீ தொலைவில் ஒரு பெட்ரோல் பங்க்கும், சம்பவ இடத்திற்கு அருகில் சைக்கிள் ஸ்டாண்டும் இருப்பதனால் அப்பகுதியில் ஆள் நடமாட்டம் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து பண்ருட்டி காவல் நிலையம் சுமார் 20 மீ தொலைவில் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பிரதான சாலை என்பதால், அங்கு ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டாலோ அல்லது வழிப்பாதைக்கு தடங்கல் ஏற்பட்டாலோ மேற்படி போலிசார் உடனடியாக அங்கு வந்துவிடுவர் என்றால் சரிதான். உண்மையிலேயே சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் சம்பவம் நடந்திருந்தால் போலிசார் அன்று அந்த இடத்திற்கு உடனேயே வந்திருப்பர் என்றாலும், அவ்வாறு எந்தவித சம்பவமும் நடக்காததனால் தான் போலிசார் அன்று சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தது தொடர்பான Video footage என்னிடம் உள்ளது, அந்த footage-ஐ பார்த்து தான் சம்பவம் நடந்ததை உறுதி செய்து கொண்டு போலிசார் வழக்கு பதிவு செய்தனர். அந்த footage-ஐ நான் போலிசாரிடமும், நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை என்றால், போலிசாரிடம் கொடுத்தேன்,

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்களா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை, என்று, எப்போது, எத்தனை மணிக்கு விசாரணை செய்தனர் என்றால் 04.06.2011 காலை 10.00 மணிக்கு, கார் ஸ்டாண்டில் வைத்து என்னை ஒரு ஆண் காவலர் மட்டும் தான் வந்து விசாரித்தார், அவரது பெயர் தெரியவில்லை. என்னை போலிசார் விசாரணை செய்கையில் என்னுடன் யார் யார் இருந்தனர் என்றால் நான் மட்டும் தான் இருந்தேன். அதன் பிறகு என்னை போலிசார் விசாரணை செய்தனரா என்றால் இல்லை. எனக்கு மேற்படி சம்பவத்தில் அடிப்பட்ட உடனேயே நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேனா என்றால் இல்லை, உடனடியாக நான் பண்ருட்டி அரசு பொது மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். மேற்படி மருத்துவமனையில் நான் மருத்துவரிடம் என்னை யார், எவ்வாறு தாக்கினார்கள் என்று கூறியுள்ளேனா என்றால் என்னை ஸ்ரீதர் கழியால் முதுகிலும், கையால் மூக்கிலும் தாக்கியதாக கூறியுள்ளேன். நான் மேற்படி மருத்துவமனையில் அன்று பிற்பகல் 3.00 மணி வரையிலும் இருந்தேன். அதன் பிறகு கடலூர் அரசு பொது மருத்துவமனைக்கு சென்று 2 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். மேற்படி கடலூர் அரசு பொது மருத்துவமனைக்கு போலிசார் வந்து என்னை விசாரணை செய்தனரா என்றால் இல்லை. ஆஜர் எதிரி ஸ்ரீதர் என்னை அடிக்கவே இல்லை என்றாலும், கார் ஸ்டாண்ட் தேர்தல் தொடர்பாக முன்விரோதத்தின் விளைவாக ஆஜர் எதிரி மீது பொய்யான புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்து, அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி என்னை அடிக்க பயன்படுத்தியதாக கூறப்படும் மூங்கில் கழியை போலிசார் கைப்பற்றினரா என்றால் கைப்பற்றவில்லை. உண்மையிலேயே ஆஜர் எதிரி என்னை மேற்சொன்னவாறு தாக்கியிருந்தால் என்னை அடிக்க பயன்படுத்தியதாக கூறப்படும் மூங்கில் கழியை போலிசார் கைப்பற்றியிருப்பர் என்றால் சரியல்ல. என்னை அடித்த கழி என்ன ஆனது என்றால், அவர் என்னை அடித்த வேகத்தில் ஒடித்துக்கொண்டது. மேற்படி விவரத்தினை நான் எனது போலிஸ் விசாரணையிலும், புகாரிலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். ஆஜர் எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும், ஆஜர் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் அவர் மீது பொய்யாக புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**நீதிமன்ற அனுமதியின் பேரில் அரசு தரப்பு மறு விசாரணை**

நான் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது கடலூர் அரசு மருத்துவமனையில் நான் மேல்சிகிச்சை பெற்றதாக சொல்லி உள்ள நிலையில், மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ சிகிச்சை ஆவணங்கள் என்னிடம் உள்ளது. சம்பவம் நடந்தது தொடர்பான Video footage தற்போது என்னிடம் உள்ளது. மேற்படி மருத்துவ ஆவணங்கள் மற்றும் Video footage ஐ சமூகம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

**அரசு தரப்பு மறு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**